04.10.2024

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண். 20/2019

அ.சா.15

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தமிழரசன் | | |
| த/பெ | செல்வராஜ் | | |
| கிராமம் | பெண்ணைவலம் | தொழில் | கிராம நிர்வாக அலுவலர் |
| தாலுக்கா | திருவெண்ணெய்நல்லூர் | வயது | 32/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது பெண்ணைவலம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணி செய்து வருகிறேன். கடந்த 22.08.2018ம் வருடம் சி.மெய்யூர் கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்த போது கூடுதலாக சித்தலிங்கமடம் கிராம பொறுப்பு கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்த போது அன்று காலை சுமார் 7.10 மணியளவில் திருவெண்ணெய்நல்லூர் காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு என்னையும், கிராம உதவியாளரையும் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்திற்கு வருமாறு அழைத்தார். நானும், என் உதவியாளர் தனபால் என்பவரும் அன்றே காலை 7.50 மணிக்கு காவல் நிலையம் சென்றோம். அப்போது அப்துல்ஜபார் என்பவரை கொலை செய்த வழக்கு சம்மந்தமாக சந்தேக எதிரியாகிய மோகன் த/பெ ரங்கசாமி, என்பவர் சுமார் 8 ம ணிக்கு காவல` நிலையத்தில் தானாக ஆஜரானார். அவரை காவல் ஆய்வாளர் அவர்கள் எங்கள் முன்னிலையில் விசாரணை செய்தபோது தான் கொலை செய்ததை ஒப்புக்கொண்டார். அதன் பின்பு காரணம் கூறி எங்கள் முன்பு அவரை காவல் ஆய்வாளர் கைது செய்தார். பின்பு எந்தவித அச்சுறுத்தலும், ஆசை வார்த்தையும் இல்லாமல் தாமாக முன்வந்து 9.15 மணியளவில் ஒப்புதல் வாக்குமூலம் ஒன்று கொடுத்துக்கொண்டார். தான் டி.எடைப்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றும், தனக்கு சொந்தமான லாரி மூலம்

மணல் திருட்டில் ஈடுபட்டதாகவும் இரண்டு முறை தனது மணல் லாரியை அப்தூல்ஜபார் காட்டிக்கொடுத்ததாலும், அவரின் அக்கா மகன் சுபாஷ் என்பவரை தாக்கிய சம்பவத்தில் அப்துல் ஜபார் தலையிட்டு பஞ்சாயத்து செய்து மன்னிப்பு கேட்கவைத்ததாலும், தனக்கு முன்விரோதம் ஏற்பட்டதாக தெரிவித்தார். அதற்கு அவரை கொலை செய்ய திட்டமிட்டதாகவும், கடந்த 27.06.2018 அன்று மதியம் 1.30 மணியளவில் தானும், தனது சகோதரர் ரவி, கார் ஓட்டுனர் செல்வம், திலிப் என்கிற திலிப்குமார் ஆகிய நான்கு பேரும் அப்தூல்ஜபார் என்பவரின் வீட்டை அடையாளம் கண்டு தனது காரில் மறைத்து வைத்திருந்த இரண்டு கூர்மையான கத்தியையும் ஒன்று கறி வெட்டும் கத்தி எடுத்து திலிப் என்கிற திலிப்குமார் பல்சர் இருசக்கர வாகனத்தில் டேங்க் கவரில் வைத்ததாகவும், மோகன், ரவி, திலிப் ஆகிய மூவரும் இருசக்கர வாகனத்தில் அப்தூல் ஜபார் வீட்டிற்கு அருகில் வாகனத்தை நிறுத்திவிட்டு கரும்பு தோட்டத்தில் மறைந்திருந்ததாகவும், சுமார் 1.45 மணியளவில் அப்தூல்ஜபார் வீட்டிற்கு சென்று வீட்டிற்குள் கட்டிலில் படுத்திருந்தவரை திலிப் என்கிற திலிப்குமார் வலது தலையில் வெட்டியதாகவும், அதன் பிறகு அப்தூல்ஜபார் திலிப்பின் தலை முடியை பிடித்ததாகவும், அவரது வலது கையில் திலிப் மீண்டும் வெட்டியதாகவும், தனது சகோதரர் ரவி அவருடைய வலது பக்க வயிற்றில் குத்தியதாகவும், தான் அவரது இடது பக்க வயிற்றில் குத்தியதாகவும் தெரிவித்து அதன் பின்பு அங்கு அப்தூல்ஜபார் என்பவரின் போன் ஒலித்துக்கொண்டிருந்த போது அதனை தான் எடுத்துக்கொண்டு தன்னுடைய காரில் டி.என்.07பிபி3994 என்ற வாகனத்தில் வீட்டிற்கு சென்று அங்கிருந்த மணல் குவியலில் மறைத்துவைத்திருந்ததாகவும், தன்னை சம்பவ இடத்திற்கு அழைத்து சென்றால் தான் அதை எடுத்து ஆஜர் செய்வதாக தெரிவித்தார். அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தை காவல்துறையினர் பதிவு செய்தனர். நானும், கிராம உதவியாளர் தனபால் என்பவரும் கையெழுத்து செய்தோம். அதன் பின்பு முதலில் மோகன் என்பவரிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் மோகனின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1ம் கையெழுத்து என்னுடையது. அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ2 ஆகும். அதன் பிறகு அவர் கூறியவாறு எதிரி மோகன் மற்றும் என் உதவியாளர் அனைவரும் ஆய்வாளருடன் மோகன் என்பவரது வீட்டிற்கு சுமார் 10.45 மணிக்கு சென்றோம். வீட்டின் அருகில் இருந்த மணல்குவியலில் இருந்து மறைத்து வைத்த ரத்த கறை படிந்த கூர்மையான கத்தியை, சேம்சங் கேலக்ஸி ஏ3 போனை கைப்பற்றி எங்கள் முன்பு ஆஜர்

செய்தார். அதை மகசரில் கைப்பற்றிக்கொண்டார். அந்த செல்போனை பார்த்தாலே என்னால் அடையாளம் காட்ட முடியும். அதை அவர் அடையாளம் காட்டினார். அந்த செல்போன் சா.பொ.1 ஆகும். அதில் நானும் என் உதவியாளரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையது ஆகும். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆகும். என்னால் அந்த கத்தியை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். சாட்சி சரியாக அடையாளம் காட்டினார். அந்த 30 செ.மீ நீளமுள்ள (19.5 செ.மீ இரும்பு பகுதி உள்ள) கத்தி சா.பொ. 1 ஆகும். அந்த செல்போன் சா.பொ.2 ஆகும். கொலைக்கு பயன்படுத்திய காரை 11.15 மணியளவில் எங்கள் முன்பு காண்பித்து ஆஜர் செய்தார். என்னால் மோகனை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். சாட்சி சரியாக அடையாளம் காட்டினார். *(காரை ஆஜர் செய்ய அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணை பகுதியாக நிறுத்திவைக்கப்பட்டு ஒத்திவைக்கப்படுகிறது.)*